01/2021

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075262

C

1. District : மாவட்டம் திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2021 FIR No: மு.த.அ. எண் 01/2021 Date: நாள் 30/01/2021

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: U/s 102 Crpc and

(ii) Act சட்டம்: மற்றும் 2018 திருத்தப்பட்ட Sections பிரிவுகள்: 7, 7A, 12 r/w PC Act

(iii) Act சட்டம்: amendment Act Sections பிரிவுகள்: 1988 as amended in 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.01.2021 Date to : நாள் வரை Between 19.55 hrs to 23.30 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் FIR 30-01-2021/04.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிழக்கு 25 km

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் [illegible].

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. T. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் [illegible]

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி [illegible]

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(A1) [illegible], I/c SRO, Assistant, O/o. SRO, [illegible] (A2) Tr. R. [illegible] (A3) Pvt. Person [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)



10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது:

இன்று 30.01.2021 ந்தேதி 04.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபல் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.T.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :-அனுப்புநர் K.கஜேந்திரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, இன்று 29.01.2021 ம் தேதி மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு மேற்கொள்வதற்கு புரோக்கர்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடம் சார்பதிவாளர் கையூட்டு வாங்குவதாக கிடைத்த தகவலின் பேரில், தஞ்சாவூர் துணை ஆய்வு குழு அலுவலராகிய

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/1/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

நான் மற்றும் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் 19.55 மணிமுதல் 23.30 மணிவரை மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனை தொடர்பாக தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட தொகை மன்னார்குடி சார் பதிவாளர் திருமதி.சங்கீதா என்பவரிடமிருந்து ரூ.37,700/-, அலுவலக உதவியாளர் திரு.R.செந்தில்குமார் என்பவரிடம் ரூ.200/- மற்றும் தனிநபரான திரு.சேகர் என்பவரிடமிருந்து ரூ.2,970/- ஆகியவை குற்றமுறு நடவடிக்கை மூலம் 29.01.2021 ஆம் தேதி பத்திரப்பதிவு செய்ய வந்தவர்களிடம் லஞ்சமாக பெறப்பட்டு வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த தொகையான ரூ.40,870/- ம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் தனிநபர் பணப்பதிவேடு, பணியாளர்கள் வருகை பதிவேடு, வெளி பணியாளர்கள் வருகை பதிவேடு, தாமத வருகை பதிவேடு, 25.01.2021, 27.01.2021, 29.01.2021 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட பதிவிற்கான கணிணியிலிருந்து பிரின்டவுட், மகசரில் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பணம் குறித்து விபரங்கள் குறிப்பிட்டுள்ள தாள்கள் அவையிருந்த கவர்கள் ஆகியவற்றை இத்துடன் ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி சார் பதிவாளர் திருமதி.சங்கீதா, அலுவலக உதவியாளர் திரு.R.செந்தில்குமார் மற்றும் தனிநபரான திரு.சேகர் ஆகியோர்மீது வழக்கு பதிவுசெய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd 30.01.2021 (K.கஜேந்திரன்) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 29.01.2021-ஆம் தேதி திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு மேற்கொள்வதற்கு புரோக்கர்கள் மற்றும் ஆவண எழுத்தர்கள் மூலமாக சார்பதிவாளர் கையூட்டு வாங்குவதாக தஞ்சாவூர் துணை ஆய்வு குழு அலுவலர் கி.கஜேந்திரன் ஆகிய எனக்கு மாலை 05.00 மணியளவில் கிடைத்த தகவலை, திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து மன்னார்குடிக்கு வரவழைக்கப்பட்டு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 19.55 மணியளவில் வந்தும், திடீர்சோதனை மேற்கொண்டதற்கான நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1. கி.கஜேந்திரன், துணை ஆய்வு குழு அலுவலர், தஞ்சாவூர். 2. B.V.நந்தகோபால், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். மேற்படி திடீர் சோதனையின் போது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தவர்கள் விவரம். 1. திருமதி.G.சங்கீதா 37/21, த/பெ. கணேசன், உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி. 2. திரு.K.வீரசிங்கம் 55/21, த/பெ கிருஷ்ணசாமி, உதவியாளர், சார்பதிவாளர், சார்பதிவாளர்

அலுவலகம், மன்னார்குடி, No.1/111, தெற்குதெரு, செருபங்கலம் , நீடாமங்கலம், மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். 3. R.செந்தில்குமார் 48/21, த/பெ ராஜமாணிக்கம், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி, No.234/1, விட்டுக்கட்டி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம். 4.திரு.S.முகுந்தன் 21/21, த/பெ சண்முகம், Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி, வடக்குதெரு, புலவன்காடு, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். 5. M. சேகர் 58/21, த/பெ மகாலிங்கம், 255-A, காந்தி ரோடு, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். மேற்படி அலுவலகத்திற்கு திடீர் சோதனைக்காக 19.55 மணியளவில் வந்த போது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் வாசலுக்கு எதிரே TN 50 AE 4189 Maruthi Swift Dzire Magma Gray நிற நான்குசக்கர வாகனம் நின்றிருந்தது. அதில் முன்பக்க ஓட்டுனர் இருக்கைக்கு பக்கத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த நபர் அவருக்கு அருகிலேயே மஞ்சள் கலர் பனியன் அணிந்த ஒரு நபரிடமிருந்து எதையோ வாங்கியதை பார்த்ததால், அந்த வாகனத்தை சந்தேகத்தின் பேரில் சோதனைக்காக விசாரித்தபோது, அந்த காரில் முன் இருக்கையில் அமர்ந்திருந்த நபர் பதட்டமடைந்தார், அவரது கையில் பண கவர்கள் இருந்தது. விசாரணையில் இவர் திருமதி.சங்கீதா, சார்பதிவாளர் பொறுப்பு மன்னார்குடி என்று தெரிய வந்தது. அவருக்கு அருகில் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்திருந்தவர் அவருடைய கணவர் திரு.பக்கிரிசாமி என்றும் தெரிவித்தார். அதனால் சார்பதிவாளரை அவர் கையில் வைத்திருந்த பண கவர்களோடு மற்றும் அவருக்கு அருகில் நின்றிருந்த மஞ்சள் கலர் பனியன் அணிந்த ஒரு நபரையும் அழைத்துக்கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சுமார் 20.00 மணியளவில் வந்து சார்பதிவாளரை அவரது இருக்கையில் அமர வைத்து சோதனை ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி திருமதி.சங்கீதா அவர்களை விசாரித்து அவரது கைகளில் வைத்திருந்த கவர்கள் மற்றும் பணத்தை வாங்கி சோதனை செய்யப்பட்டது. அதில் ஒரு வெளிர் பச்சை நிற Chat பேப்பரில் பணம் சுத்தி வைக்கப்பட்டு லப்பர்பேன்ட் போடப்பட்டும், மேலும் 2 காக்கி கவர்களில் பணம் வைக்கப்பட்டு ரப்பர்பேன்ட் போடப்பட்டும் மேலும் ரூ.500/- மற்றும் ரூ.200/- அடங்கிய கட்டு ரப்பர்பேன்ட் போடப்பட்டும் இருந்ததும் கண்டறியப்பட்டன, அதன் விபரம் கீழ்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளிர் பச்சை நிற Chart பேப்பரில் பணம் சுத்தி வைக்கப்பட்டு லப்பர்பேன்ட் போடப்பட்டும | அந்த பேப்பரில் ஒரு பக்கம் 29.01.2021 என எழுதப்பட்டும் அதன் கீழ் கி-1-3000, பவர்-1-500, ரசீது-1-300 கூடுதல் 3800 + 6500 கூடுதல் 10300 என எழுதப்பட்டிருந்தது. | ரூ.500 X 20 =10,000/-<br>ரூ.200 X 1 = 200/-<br>ரூ.100 X 1 = 100/-<br>10,300/- |
| | | அந்த பேப்பரில் மறு பக்கம் 25.01.2021 என எழுதப்பட்டும் அதன் கீழ் கி-1-4000, MOD-1- | ரூ.500 X 11 = 5,500/-<br>ரூ.200 X 5 = 1,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | 500, குத்தகை – 1 -500, கி-1-1000 கூடுதல் 6000 இதற்கு கீழ் 27.01.2021 என தேதி எழுதப்பட்டு அதன் கீழ் அட்கூடிகேசன் 1 -500 கூடுதல் 6500 என எழுதப்பட்டிருந்தது. | கூடுதல் 6,500/- |
| 2. | காக்கி கவர் | இந்த காக்கி கவருக்குள் ஒரு வெள்ளை தாளில் பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த வெள்ளை தாளில் 29.01.2021 என எழுதப்பட்டு இதன் கீழ் 1) MOD-2 -1000, 2) செட்டில்மெண்டு -1 - 2000, 3) தானம் -1 – 1000, 4) ரசீது -1 -200, 5) அரவத்தூர் -1 - 1000, 6) குமரன்நகர் -1 -1000, 7) Special Marriage – 1 -500 கூடுதல் 8 6700 என எழுதப்பட்டிருந்தது. இதில் பண விபரம் மட்டும் நீல கலரிலும் மற்றவை கருப்பு கலரிலும் எழுதப்பட்டிருந்தது. | ரூ.500 X 13 = 6,500/-<br>ரூ.200 X 1 = 200/-<br>கூடுதல் 6,700/- |
| 3. | காக்கி கவர் | இந்த காக்கி கவருக்குள் ஒரு வெள்ளை தாளில் பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த வெள்ளை தாளில் ஒரு பக்கம் certificate extract from the Town survey land register பதிவு இருந்தது. மறு பக்கம் 27.01.2021 என எழுதப்பட்டு இதன் கீழ் 1)செம்மொழி நகர்-2 - 2000, 2) மேல பத்ம சாலவர்தெரு -2 -2000, 3) மதுக்கூர்சாலை -2 – 4000, 4) New bypass road - 1 -1000, 5) MOD -2 -1000, 6) ரசீது -1 -200, 7) அய்யப்பன் நகர்– 1 -1000, 8) ராமநாதன் தெரு -1 -3000 (செல்லப்பா) கூடுதல் 12 14200 என எழுதப்பட்டிருந்தது. இதில் பண விபரம் மட்டும் நீல கலரிலும் | ரூ.500 X 28 =14,000/-<br>ரூ.200 X 1 = 200/-<br>கூடுதல் 14,200/- |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றவை கருப்பு கலரிலும் எழுதப்பட்டிருந்தது. | |

மேற்கண்ட வகையில் இருந்த பணம் கூடுதல் தொகை ரூ.37,700/- பணம் குறித்து சார்பதிவாளர் பொறுப்பு திருமதி.சங்கீதா அவர்களிடம் விசாரிக்க வெளிர் பச்சை நிற Chart பேப்பரில் பணம் சுத்தி வைக்கப்பட்டு லப்பர்பேன்ட் போடப்பட்டு இருந்த பணம் ரூ.16,800/- (ரூ.10,300/-+6500/-) செந்தூர் முருகன் கணிணி ஆவண நிறுவனம் வைத்துள்ள திரு.ரஜினி என்பவரிடமிருந்தும், இரண்டு காக்கி கவர்களில் உள்ள பணம் ரூ.20,900/- (ரூ.6,700/- +14,200/-) திரு.கென்னடி என்பவரிடமிருந்தும் பத்திரப்பதிவு மேற்கொண்டதற்காக திரு.சேகர் என்ற புரோக்கர் மூலம் பெற்றதாகவும் மஞ்சள் கலர் பனியன் அணிந்திருந்த நபரை காண்பித்து இவர்தான் சேகர் என்று அடையாளம் காண்பித்தார். அதனால் சார்பதிவாளர் பொறுப்பு திருமதி.சங்கீதா அவர்கள் கையூட்டாக பெற்றிருந்த மேற்படி **ரூ.37,700/- பணத்தை கைப்பற்றப்பட்டது.** மேலும் இவர் அலுவலகத்த விட்டு கிளம்புவதற்கு முன்பு சேகர் என்பவரை எப்போதும் போல் ஆவண தயாரிப்பு செய்யும் நபர்களின் கடைகளுக்கு சென்று கையூட்டு பணம் வதூல் செய்துவர சொன்னதின்பேரில் சேகர் பணம் வாங்கி வைத்துக்கொண்டிருந்ததாகவும், தான் அலுவலகத்தை விட்டு 07.45 மணியளவில் புறப்பட்டு தன்னுடைய சொந்த காரில் அலுவலகத்தின் எதிரே காத்திருந்ததாகவும், அப்போது சேகர் வாங்கி வைத்திருந்த கையூட்டு பண கவர்களை தன்னிடம் ஒப்படைத்த போதுதான் திடீர் ஆய்வு குழுவினர் அங்கு வந்துவிட்டதாகவும் தெரிவித்தார். திருமதி.சங்கீதா அவர்களை விசாரத்து தனி வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. மேலும் சார்பதிவாளர் பொறுப்பு திருமதி.சங்கீதா அவர்களிடம் பத்திரப்பதிவுவிபரம் குறித்து விசாரிக்க இன்று 29.01.2021-ஆம் தேதி மொத்தம் 40 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் அதில் அட்ஜூடிகேசன் -2, 47 அக்கவுன்ட்-1, களப்பணி-1 என அதன் விவரங்களை தெரிவித்து பதிவிற்கான விபரங்களை கணிணியிலிருந்து பிரின்டவுட் எடுத்து ஆஜர்படுத்தினார். மேலும் 25.01.2021, 27.01.2021 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட பதிவிற்கான விபரங்களையும் கணிணியிலிருந்து பிரின்டவுட் எடுத்து ஆஜர்படுத்தினார். மேற்படி சார்பதிவாளரிடம் அலுவலக தனிநபர் பணபதிவேடு குறித்து கேட்ட போது அந்த ஆவணத்தை எடுத்து சார்பதிவாளர் ஆஜர் படுத்தினார். அதில் இன்று 29.01.2021ஆம் தேதியில் சார்பதிவாளர் திருமதி.சங்கீதா

ரு.500/-, உதவியாளர் திருமதி.செ.சுதா ரு.680/-, உதவியாளர் திரு.கீ.வீரசிங்கம் பணப்பதிவு ஏதுமில்லை, உதவியாளர் க.சஞ்சீவிகுமார் ரூ.100/-, அலுவலக உதவியாளர் திரு.இரா.செந்தில்குமார் ரூ.340/-, DEO ச.முகுந்தன் ரூ.250/- மற்றும் கேமரா ஆப்பரேட்டர் வீ.சௌமியா ரூ.450/- என கையிருப்பு தொகை குறித்து பதிவு செய்திருந்தார்கள். சார்பதிவாளர் திருமதி.சங்கீதா அவரிடம் பதிவு செய்திருந்த ரூ.500/- குறித்து கேட்க இன்றைய தினம் செலவாகிவிட்டது என தெரிவித்தார். மேலும் அலுவலக வருகை பதிவேடு குறித்து கேட்க ஜனவரி 2021க்குரிய வருகைப் பதிவேட்டை ஆஜர்படுத்தினார். அதில் 29.01.2021ஆம் தேதி தற்போது ஆஜரில் உள்ள திருமதி.G.சங்கீதா, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், திரு.K.வீரசிங்கம் உதவியாளர், செந்தில்குமார் அலுவலக உதவியாளர் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். மேலும் வெளிபணியாளர் வருகை பதிவேட்டையும் ஆஜர்படுத்தினார் அதில் தற்போது ஆஜரில் உள்ள முகுந்தன், DEO 29.01.2021ஆம் தேதி கையொப்பம் செய்துள்ளார். தாமத வருகைப்பதிவேட்டில் 29.01.2021 யாரும் இல்லை என பதிவு உள்ளது. மேற்படி 1) தனிநபர் பணப்பதிவேடு, 2) பணியாளர்கள் வருகை பதிவேடு, 3) வெளி பணியாளர்கள் வருகை பதிவேடு, 4) தாமத வருகை பதிவேடு, 5) 25.01.2021, 27.01.2021, 29.01.2021 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட பதிவிற்கான கணிணியிலிருந்து எடுக்கப்பட்ட பிரின்டவுட் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும் மஞ்சள் நிற பனியன் அணிந்திருந்த திரு.சேகர் என்பவரை விசாரிக்க இவர் மன்னார்குடி காந்தி ரோட்டில், யானைக்கால் மண்டபம் அனுமார் கோயில் அருகில் வசிப்பதாகவும், தான் தினந்தோறும் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு டீ, காபி வாங்கி கொடுப்பதாகவும், எடுபிடி வேலைகள் பார்ப்பதாகவும் சார்பதிவாளர் பொறுப்பில் உள்ள திருமதி. சங்கீதா அவர்கள் தினமும் வேலை முடிந்து போகும்போது ரூ.200 அல்லது ரூ.300/- என தனக்கு சம்பளமாக பணம் தருவார் என்றும், ஆவண பதிவிற்கு வரும் ஆவண எழுத்தர்கள் மற்றும் ஆவண எழுத்தர்களை போல் செயல்படும் நபர்கள் சார்பதிவாளருக்கு கையூட்டாக தரும் பணத்தை வாங்கி சார்பதிவாளர் வீட்டிற்கு கிளம்பும் போது தான் கொடுப்பது வழக்கம் என்றும் கூறினார். அதுபோன்று இன்று 29.01.2021 தேதி ரஜினி, கென்னடி ஆகியோர் அலுவலகத்திற்கு சென்று வசூல் செய்து வைத்திருந்த பண கவர்களை மன்னார்குடி சார்பதிவாளர் திருமதி. சங்கீதா அவர்களிடம் காரில் வைத்து கொடுத்த

போதுதான் திடீர் சோதனைக்கு தாங்கள் வந்து விட்டீர்கள் என்று கூறினார். மேலும் இவரை சோதனையிட இவரிடமிருந்து ரூ.2,970/- (ரூ.500X3, ரூ.200X5,ரூ.100X3, 50X2, 10 X7) பணம் இருந்தது. இது குறித்து விசாரிக்க ஆவண பதிவிற்கு வரும் ஆவண எழுத்தர்கள் மற்றும் ஆவண எழுத்தர்களை போல் செயல்படும் நபர்கள் ஆகியோர் கொடுத்த பணம் என்றும், யார்யாரிடமிருந்து எவ்வளவு வாங்கினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை எனவும் தெரிவித்தார். எனவே இவரிடமிருந்த சந்தேகத்திற்குரிய பணம் ரூ.2,970/- கைப்பற்றப்பட்டது. இவரை விசாரித்து தனி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.வீரசிங்கம், உதவியாளர் என்பவரை சோதனையிட இவரிடம் பணம் ஏதும் இல்லை. இவர் தனிநபர் பண பதிவேட்டில் இன்று 29.01.2021 தேதி வீட்டிலிருந்து எடுத்து வந்த பணம் குறித்து எந்தப் பதிவும் செய்யவில்லை. இந்த பதிவேட்டில் 04.01.2021, 27.01.2021 ஆகிய தேதிகளிலும் பெயரை மட்டும் பதிவு செய்துவிட்டு சொந்த கையிருப்பு பணம் குறித்து எந்த பதிவும் செய்யாமல் உள்ளார். திரு.செந்தில்குமார், அலுவலக உதவியாளர் என்பவரை சோதனையிட இவர் தன்னிடம் ரூ.330/- இருப்பதை தன்னுடைய சொந்தப்பணம் என்று ஆஜர்படுத்தினார். இந்தப்பணம் இவருடைய சொந்தப்பணம் என்பவதால் இவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று 29.01.2021 ஆம் தேதி பதிவான CCTV பதிவுகளை பார்த்த போது திடீர் சோதனை குழுவினர் சரர்பதிவகத்திற்குள் நுழைந்ததும் திரு.செந்தில்குமார் சார்பதிவாளர் அறையிலிருந்து கண்ணாடி தடுப்பு ஓட்டை வழியாக கணிணி அறைக்குள் பணத்தினை தூக்கி போடும் பதிவு இருந்ததை பார்த்து அவரை விசாரிக்க அவர் இன்று பத்திரப்பதிவிற்காக வந்திருந்த ஆவண எழுத்தர்கள் கொடுத்த பணத்தில் இன்று செலவு போக மீதி இருந்த ரூ.200/-ஐ தூக்கி கணிணி அறைக்குள் போட்டதாக கூறினார். அதனால் கணிணி அறைக்குள் சோதனையிட்ட போது கணிணி அறையில் கண்ணாடி தடுப்புக்கு அருகே வைக்கப்பட்டிருந்த முதல் கம்பியூட்டருக்கு கீழே இரண்டு 100 ரூபாய் நோட்டுகள் கிடந்தது. யார்யாரிடமிருந்து எவ்வளவு பணம் வாங்கினீர்கள் என்று விபரம் கேட்க இவர் விபரம் கூற மறுத்துவிட்டார். அதனால் மேற்படி ரூ.200/- இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. திரு.முகுந்தன், Data Entry Operator என்பவரை சோதனையிட இவரிடம் பணம் ஏதும் இல்லை. இவர் தான் வீட்டிலிருந்து ரூ.250/- எடுத்து வந்ததாகவும், தன்னுடை சொந்தப்பணம் என்று ஆஜர்படுத்தினார். இந்தப்பணம்

இவருடைய சொந்தப்பணம் என்பவதால் இவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ரூ.40,870/- பணத்தின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.G.சங்கீதா உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி. | ரூ.500 X 72 =36,000/-<br>ரூ.200 X 8 = 1,600/-<br>ரூ.100 X 1 = 100/- | ரூ.37,700/- |
| 2. | M. சேகர் 58/21, த/பெ மகாலிங்கம், 255-A, காந்தி ரோடு, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். | ரூ.500 X 3 = 1,500/-<br>ரூ.200X 5 = 1,000/-<br>ரூ.100X3 = 300/-<br>ரூ.50X2 = 100/-<br>ரூ.10 X7 = 70/- | ரூ.2,970/- |
| 3. | R.செந்தில்குமார் அலுவலக உதவியாளர், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி | ரூ.100 X 2 = 200/- | ரூ.200/- |
| | கூடுதல் | | ரூ.40,870/- |

இந்த திடீர் சோதனை நடவடிக்கை 29.01.2021ஆம் தேதி 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அய்யா, மேற்படி புகார் மீது இன்று 30.01.2021ந் தேதி 04.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2021 U/s. 102 Cr.P.C, and 7, 7A, 12 of PC Act 1988 as amended on 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (Sd) B.V.நந்தகோபால், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். 30.01.2021.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் புகார், திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும் இதன் நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல்கள் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

30/1/21

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.